**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**

**வழக்கு எண்: CC –243/2023**

**வழக்கு சாட்சி :PW2(LW2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜசக்பாண்டியன் | தொழில் | : | கடை வியாபாரம் |
| தந்தை பெயர் | : | வெள்ளபாண்டியன் | சமயம் | : | |
| கிராமம் | : | சங்கரன் கோவில் தென்காசி | வயது | : | 52 |
| தாலுக்கா | | | | : | |

Solemnly affirmed by Thiru. Abraham Selvin , JA of this Court in accordance with the provisions of Act X of 1873

**(எதிரிகள் ஆஜர் இல்லை .எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on** the **day 30th day of January 2026.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 – Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar Card of the Witness verified.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :–**

1. நான் தற்போது சங்கரன் கோவில், தென்காசியில் குடியிருந்து வந்து காய்கறி கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி அரசி என் மகள் ஆவார். எனக்கு பட்டியல் சாட்சிகள் 3,4 , 6 முதல் 8 வரையிலானவர் மற்றும் எதிரிகள் இருவரையும் தெரியும் ( எதிரிகள் ஆஜர் இல்லை). கடந்த 16.05.2023 ம் வருடம் காலை 11.00 மணிக்கு இலுப்பூர் DSP அலுவலகத்திற்கு நானும், எனது மனைவி , எனது மகள் அரசி, இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் அனைவரும் சேர்ந்து நான் ரூ.15 இலட்சத்தை 1வது எதிரிக்கு கொடுத்து, அவர் பணம் கொடுக்கவில்லை என்பதற்காக விசாரணைக்காக வந்தோம். அந்த விசாரணையில் எதிரிகள் இருவரும் மேற்சொன்ன தொகையில் இருந்து ரூ.5 இலட்சம் மட்டும தான் தருவேன் என்று சொன்னார்கள். உங்களால் முடிந்ததை பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். பிறகு பி.டி.ரவி, சுரேஷ் இருவரும் நான்கு, ஐந்து நபர்களை அழைத்து வந்து காரின் முன்பாக சாராயம் குடித்துவிட்டு , கம்பு, கட்டையெல்லாம் எடுத்துக் கொண்டு எங்களை அடிக்க வந்தார்கள்.ஒழுங்கா ஊருக்கு தப்பிச்சிட்டு போங்க அங்க வந்து அடிக்கிறோம். ஏதாவது சொன்னீங்கன்னா ஊரில் வந்து உங்களை துண்டு, துண்டாக வெட்டி விடுவோம் என்று சொன்னார்கள். எதிரிகள் இருவரும் எங்கள் அண்ணன் திமுகவில் பெரிய பதவியில் இருப்பதினால் எங்களை ஒன்றும் பண்ண முடியாது பணமும் தர முடியாது என்று சொன்னார்கள். எங்கள் அண்ணன் சி.எம். உடன் இருக்கிறார் என்றும், உனக்கு தெரிந்ததை செய்து கொள் என்று சொன்னார்கள்.

2. இந்த சம்பவம் நடந்ததற்கான காரணம் 1வது எதிரியின் அரசகுமாரின் மகள்

2007 ம் வருடம் அவர் மகள் பிரியா மருத்துவ படிப்பிற்காக மேற்சொன்ன ரூ. 15 இலட்சத்தை மூன்று முறை பிரித்து பீசாக கட்டினேன். இந்த பணத்தை நான் கேட்ட போது 2013 ம் வருடம் விராலிமலைக்கு அவருடைய பி.டி.கே கல்லூரிக்கு வரச் சொல்லி நான் உங்களுக்கு காசோலை தருகின்றேன் என்று சொன்னவுடன் காலை 07.00 மணிக்கு சென்றேன். அங்கு அவர் என்னிடம் இருந்து 2 இலட்சம் ரூபாய் காசோலை ஒன்றும், 3 இலட்சம் ரூபாய் காசோலை ஒன்றும் வாங்கிக் கொண்டு அங்கு ஆளை வைத்து என்னை அடித்தார். அதில் எனக்கு தலையில் சிறு, சிறு காயங்கள் ஏற்பட்டது . இந்த சம்பவம் தொடர்பாக விராலிமலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அங்கு அந்த புகாரினை சரியாக விசாரிக்காமல் பிறகு சமரசமாக போக சொன்னார்கள். நானும், சமரசமாக போவதற்கு எழுதிக் கொடுத்தேன். 12 இலட்ச ரூபாய் காசோலை மட்டும் என்னிடம் உள்ளது. அது சம்மந்தமாக புதுக்கோட்டை அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது (சாட்சி தானாக முன்வந்து அந்த வழக்கின் சட்ட பிரிவுகள் 420, 506(1), இன்னும் இரண்டு , மூன்று பிரிவுகள் சேர்த்து போட்டுள்ளனர்கள் என்றும், அந்த பிரிவு தற்போது ஞாபகம் இல்லை என்றும் கூறினார்கள்) போலிசார் என்னை விசாரித்தனர்.

**( சாட்சியானவர் அரசு வழக்கை பகுதி ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam 2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–**

இவ்வழக்கின் சம்பவத்தில் எதிரிகள் இருவரும் என்னையும், அசா. 1 எனது மனைவியும் தேவுடியா மகளே என்று சொல்லி திட்டினார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். அரசு தரப்பு பிறழ் சாட்சியில் சாட்சி தானாக முன்வந்து நீதிமன்ற அனுமதியோடு சம்பவத்தன்று என்னுடைய பாக்கெட்டில் இருந்த என்னுடைய புகைப்படத்தை எடுத்து ஒரு பேப்பரில் பிறகு சாட்சி 20 ரூ பத்திரம் என்று சொல்லி அதில் என்னுடைய புகைப்படத்தை ஒட்டி அந்த பத்திரத்தில் நான் பணத்தை பெற்றுக் கொண்டதாக அவர்களே எழுதி என்னிடம் கையொப்பமும் பெற்றுக் கொண்டனர். அரசு தரப்பில் முதல் விசாரணையில் காமக் கொடூரமான வார்த்தைகளை சொல்லததற்கு காரணம் நீதிமன்றத்தில் அந்த வார்த்தைகளை சொல்ல கூச்சமாக இருந்தது என்று சொன்னால் ஆமாம்.

**எ.த.கு.வி**

இல்லை.